வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 25.03.2026 புதன்கிழமை இதழ் : 78 பக்கங்கள் : 08



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# இந்திய பிரதமர்-அநுர நேற்று முக்கிய பேச்சு!

## நெருக்கடி நிலை குறித்து ஆராய்வு

கொழும்பு, மார்ச் 25

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க ஆகியோருக்கு இடையே தொலைபேசி வழி முக்கியமான கலந்துரையாடல் இடம்பெற்றுள் ளது.

இந்த உரையாடலில், குறிப்பாக மேற்கு ஆசியாவில் உருவாகி வரும் நிலைமை மற்றும் அதன் விளைவாக உலகளாவிய எரிசக்தி பாதுகாப்பில் ஏற்படும் சவால்கள் குறித்து விரிவா கப் பேசப்பட்டதாக இந்திய பிரத மர் தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தியா - இலங்கை இடையிலான எரிசக்தி ஒத்துழை ப்பை வலுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் முக்கிய திட்டங்களின் முன்னேற்றம் குறித் தும் இரு தலைவர்களும் ஆய்வு செய்துள்ளனர். அதேவேளை, பிரா ந்திய பாதுகாப்பை மேம்படுத்துவத ற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கை கள் தொடர்பிலும் கவனம் செலுத் தப்பட்டுள்ளது.

இந்தியாவும் இலங்கையும் நீண்டநாள் நெருக்கமான மற்றும் நம்பிக்கைக்குரிய நண்பர்கள் எனக் குறிப்பிட்டுள்ள இந்தியப் பிரதமர் மோடி, இரு நாடுகளும் பகிர்ந்து கொண்டுள்ள சவால்களை சமாளிக்க ஒன்றிணைந்து செயற்பட உறுதிய ளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த தொலை பேசி உரையாடல் குறித்து ஜனா திபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ள தாவது-

மத்திய கிழக்கில் நிலவி வரும் யுத்தச் சூழல் குறித்து ஜனா திபதி அநுர குமார திஸா நாயக்க, இந்தியப் பிரதமர்

07

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியுடன் வடக்கு மாகாண ஆளுநர் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 25

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-அண்ட்ரூ பிரஞ்ச் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோருக் கிடையிலான விசேட உயர்மட்டக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடை பெற்றது.

இக்கலந்துரையாடலின் ஆரம்பத்தில் ஆளுநரால் மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் முன்னுரிமைத் தேவைகள் குறித்த விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி, காணிப்

07



## ஐ.நா. வதிவிட பிரதிநிதி மார்க் அண்ட்ரே நேற்று டான் தலைமையகத்துக்கு விஜயம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கி ணைப்பாளர் மார்க் அண்ட்ரே பிரான்ஞ் நேற்று டான் ஊடக வலையமைப்பின் தலைமையகத்துக்கு விசேட விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது, டான் குழுமத்தின் தலைவர் எஸ்.எஸ். குகநாதனை சந்தித்த அவர், நாட்டின் தற்போதைய நிலைவரங்கள் மற்றும் ஊடகத்துறையின் பங்களி ப்பு குறித்து விரிவான கலந்துரையாடலில் ஈடு பட்டார்.

07

## இலங்கைக்கான நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்த ஆசிய அபிவிருத்தி வங்கி!

கொழும்பு, மார்ச் 25

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இந்த ஆண் டுக்காக இலங்கைக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த 380 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை 480 மில்லியன் டொலர் வரை அதிகரிப்பதற்கும், நிலவும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு அதில் 200 மில்லியன் டொலர்களை உடனடியாக இலங்கை க்கு வழங்குவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள் ளது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஆசிய அபிவி ருத்தி வங்கியின் தலைவர் மசாட்டோ கண்டா உள் ளிட்ட பிரதிநிதிகள் குழு வினர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத் தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக் கவை சந்தித்த

07

## சமையல் எரிவாயு போதுமானளவு கையிருப்பில்!

கொழும்பு, மார்ச் 25

அரசு மற்றும் தனியார் விநியோகஸ்தர்களின் திட் டமிடப்பட்ட விநியோக ங்களின் அடிப்படையில் எதிர்வரும் மாதங்களில் சமையல் எரிவாயு விநி யோகம் போதுமானதாக இருக்கும் என்று அரசாங்கம்

07

## சட்ட அமுலாக்கத்துறையின் அரசியல்மயமாக்கலால் கடும் அச்சுறுத்தலில் பொதுமக்கள் மற்றும் நீதித்துறை

### சர்வதேச சட்ட நிபுணத்துவ அமைப்புகளுக்கு எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் கூட்டாகக் கடிதம்

கொழும்பு, மார்ச் 25

நாடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் வன்முறைகளாலும், சட்ட அமுலாக்கத்துறை அரசியல் மய மாக்கப்பட்டிருப்பதனாலும் பொதுமக்கள் மற்றும் சட்டத் தரணிகள் உள்ளடங்கலாக நீதித்துறையினர் பாரிய அச்சுறுத் தல்களுக்கு முகங்கொடுத் திருப்ப தாகக் குறிப்பிட்டு சர்வதேச சட்ட நிபுணத்துவ அமைப்புகளுக்கு எதிர்க்கட்சிகள் கூட்டாகக் கடித மொன்றை அனுப்பிவைத்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் எதிர்க்கட்சிக ளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரணில் விக்ரமசிங்க, நாமல் ராஜபக்ஷ, ஜீவன் தொண்டமான், நிமல் சிறிபால டி சில்வா, மனோக கணேசன், திலித் ஜயவீர, சுசீஸ்வர பண்டார,

07

## உரக் கையிருப்பை போதுமான அளவு வழங்குவதை உறுதி செய்யவேண்டும்

### ஜனாதிபதி அநுரகுமார உத்தரவு

கொழும்பு, மார்ச் 25

நாட்டினதும் மக்களினதும் உணவுப் பாதுகாப்புக்கு அரசாங்கம் அதிக முக்கியத்துவத்தை அளித்துள்ளதாக வும், அதற்கமைய, சிறு போகத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை எவ்வித தடையுமின்றி வழங்கு வதை உறுதிசெய்யும் வகையில், சந்தையில் போதுமான உரக் கையிருப்புகளைப் பேணுவதற்கு விவசாய அமைச்சு மற்றும் தனியார் நிறுவனங்கள்

07

## அர்ச்சுனாவுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு!

கொழும்பு, மார்ச் 25

மலையகத் தமிழர்களை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனுக்கு எதிராக குற்றப் புலனாய்வு திணைக்க ளத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவரின் கருத்து தொடர்பில் விசாரணை நடத்தி சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி மலையக சிவில் அமைப்பு பிரதிநிதிகளால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அர்ச்சுனா இராமநாதன் வெளியிட்ட

07

## நிர்வாகப் பணிகளில் இருந்து விடைபெற்றார் சற்குணராஜா!



யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணப் பலகலைக் கழகத்தின் கணிதவியல் பேரா சிரியர் சிவக்கொழுந்து சிறிசற் குணராஜா, கடந்த 2020ஆம் ஆண்டிலிருந்து வகித்த துணை வேந்தர் பதவியில் இருந்து நேற்றுடன் விடைபெற்றார்.

07

## ரஷ்யாவிலிருந்து எரிபொருள் பெறுவதற்கு பேச்சுவார்த்தை

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, மார்ச் 25

ரஷ்யாவிடமிருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள் வதற்காக தற்போது இராஜதந்திர மட்டத்திலான பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், அரசாங்கங்களுக்கு இடையி லான ஒப்பந்தங்கள் மூலம் எரிபொருளைப்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் மானியங்கள் மே முதல் நீக்கப்படலாம்!

## அரசாங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 25

சர்வதேச நாணய நிதியத்தின் தீர்மானத்தைப் பொறுத்து, எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் எரிபொருள் மானியங்கள் நீக்கப்படலாம் என அரசாங்கம் எச்சரித்துள்ளது.

தற்போதைய விலை முறைமைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைக்காவிட்டால், எரிபொருள் விலைகள் மேலும் அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பெற்றோலிய அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால, தற்போது ஒரு லீற்றர் டீசலுக்கு 100 ரூபாவையும், ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 20 ரூபாவையும் அரசாங்கம் மானியமாக வழங்கி வருவதாகக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி வரை இந்த மானியம் தொடரும் என்ற போதிலும், அதன் பின்னரான தீர்மானம் சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி மற்றும் மத்திய கிழக்கின் போர்ச் சூழலைப் பொறுத்தே அமையும் என அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது இந்த மானியங்களுக்காக அரசாங்கம் மாதம் ஒன்றுக்கு சுமார் 20 பில்லியன் ரூபாவைச் செலவிட்டு வருவதாகவும், இந்தச் சுமையை அரசாங்கமே முழுமையாகப் பொறுப்பேற்றால் ஆண்டொன்றுக்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் மேலதிகச் செலவு ஏற்படும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையில், இது குறித்த இறுதித் தீர்மானம் எட்டப்படவுள்ளது.

# பாடசாலை விளையாட்டுகள், பயிற்சிகளை அதிகாலை வேளை முன்னெடுக்க பணிப்பு

கொழும்பு, மார்ச் 25

தற்போது நிலவி வரும் கடும் வெப்பமான வானிலை காரணமாக, பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சிகளை அதிகாலை வேளைகளில் மாத்திரம் முன்னெடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் விசேட அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள வானிலை ஆய்வாளர் மலித் பெர்னாண்டோ, நண்பகல் வேளையில் சூரிய வெப்பத்தின் தாக்கம் மிக அதிகமாகக் காணப்படுவதால், மாணவர்களின் ஆரோக்கியத்தைக் கருத்திற்கொண்டு வெளிப்புற நிகழ்வுகளை அதிகாலை அல்லது மாலை வேளைகளில் மாத்திரம் திட்டமிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

குறிப்பாக, மதிய நேரங்களில் மாணவர்களை நீண்ட நேரம் மைதானங்களில் ஈடுபடுத்துவதைத் தவிர்க்குமாறும், பயிற்சிகளைத் திட்டமிடும்போது நிலவும் காலநிலையை அவதானத்தில் கொள்ளுமாறும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

# மத்திய கிழக்குப் போர்ச் சூழல் குறித்து இந்திய-இலங்கை அமைச்சர்கள் பேச்சு



கொழும்பு, மார்ச் 25

மத்திய கிழக்கு போர்ச் சூழல் குறித்து இந்திய - இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் தொலைபேசி வாயிலான பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளனர்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கிடையே மத்திய கிழக்கில் நிலவும் தற்போதைய போர்ச் சூழல் மற்றும் அதன் பிராந்திய தாக்கங்கள் குறித்தும் இந்த முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

மேற்கு ஆசியாவில் தொடர்ந்து அதிகரித்து வரும் மோதல்கள் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து இரு அமைச்சர்களும் விரிவாக ஆராய்ந்தனர்.

இதன்போது, இந்தியாவின் "அண்டை நாடுகளுக்கு முதலிடம்" என்ற கொள்கையின் கீழ் இலங்கையுடனான உறவை வலுப்படுத்துவதை ஜெய்சங்கர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை உறுதி செய்யும் இந்தியாவின் "மகாசாகர்" முன்னெடுப்பு குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.



இந்த உரையாடல் மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக அமைச்சர் ஜெய்சங்கர் தனது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மருந்துப் பொருள்களின் விலைகள் உயர வாய்ப்பு

கொழும்பு, மார்ச் 25

எரிபொருள் விலை உயர்வு, மூலப்பொருள்களின் விலையேற்றம் மற்றும் கப்பல் கட்டண அதிகரிப்பு போன்ற காரணிகளால், தற்போதைய விலையில் மருந்துப் பொருள்களை விநியோகிப்பது சாத்தியமற்ற ஒன்று என உள்நாட்டு மருந்து உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம் விடுத்துள்ள அறிவிப்பில், தற்போது கையிருப்பில் உள்ள மூலப்பொருள்கள் தீர்ந்தவுடன், அரச மற்றும் தனியார் துறையினரிடம் விலை திருத்தத்தைக் கோரவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான மூலப்பொருள்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

அவற்றின் விலையும், போக்குவரத்துச் செலவும் கணிசமாக அதிகரித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் நளின் கன்னங்கர தெரிவித்துள்ளார்.

தற்போது பழைய கையிருப்புகளைக் கொண்டு உற்பத்தி நடப்பதால் உடனடி விலை உயர்வு இருக்காது.

இருப்பினும், அடுத்த 2 முதல் 4 வாரங்களுக்குள் நிலைமை மாறக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் "நாங்கள் அதிக இலாபத்தை எதிர்பார்க்க வில்லை, உற்பத்திச் செலவை ஈடுகட்டவே இந்த விலை மாற்றத்தைக் கோருகிறோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம் காரணமாக உலகளாவிய ரீதியில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளதோடு, விநியோகச் சங்கிலியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இது இலங்கையின் மருந்து உற்பத்தித் துறையிலும் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எவ்வாறாயினும், மருந்து விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் தொடர்ச்சியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உற்பத்தியாளர்கள் உறுதியளித்துள்ளனர். (அ)

# மாற்று விமானப் போக்குவரத்து மையமாக மத்தளவை பயன்படுத்த நிறுவனங்கள் ஆர்வம்

கொழும்பு, மார்ச் 25

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர் பதற்றங்களுக்கு மத்தியில், மத்தள சர்வதேச விமான நிலையத்தை ஒரு மாற்று விமானப் போக்குவரத்து மையமாகப் பயன்படுத்துவதற்குப் பல்வேறு சர்வதேச விமான நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாகத் துறைமுகங்கள் மற்றும் விமான போக்குவரத்து பிரதி அமைச்சர் ருவான் கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

எமிரேட்ஸ், கட்டார் ஏயார்வேஸ் மற்றும் வளைகுடா நாடுகளைச் சேர்ந்த விமான நிறுவனங்கள், தரையிறக்கக் கட்டணமின்றி மத்தள விமான நிலையத்தைப் பயன்படுத்தும் அனுமதி கோரியுள்ளன.

போர்ச் சூழலற்ற பாதுகாப்பான அமைவிடம் மற்றும் உலகின் மிகப்பெரிய விமானமான ஏயார்பஸ் ஏ-380 ரக விமானங்களைக் கையாளும் இலங்கையின் ஒரே விமான நிலையம் என்ற தனிச்சிறப்பினால் மத்தள விமான நிலையம் தற்போது உலகளாவிய கவனத்தைப் பெற்றுள்ளது.

மத்திய கிழக்கின் நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி, இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறையை மீண்டும் கட்டியெழுப்பவும் அரசாங்கம் இந்த வாய்ப்பை முன்னெடுத்துள்ளது.

இதற்கிடையில், துருக்கிய விமான நிறுவனம் தனது பயணங்களின் எண்ணிக்கையை அதிகரித்து வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# பரீட்சைகளில் மாற்றமில்லை!

கொழும்பு, மார்ச் 25

எதிர்வரும் எந்தவொரு பரீட்சை கால அட்டவணைகளிலும் மாற்றங்கள் செய்யப்படமாட்டாது என கல்வி பிரதி அமைச்சர் கலாநிதி மதுர சேனவிரத்ன திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

உயர்மட்ட அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

விடுமுறைக்கு முன்னதாக பாடசாலைகள் இயங்காத சுமார் நான்கு நாள்கள், பாடத் திட்டங்களை நிறைவு செய்வதில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது என கல்வி அமைச்சு கருதுகிறது.

நாட்டின் தற்போதைய எரிசக்தி கொள்கைகளுக்கு ஏற்ப கல்வித்துறையின் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், பரீட்சைகளை ஒத்திவைக்கவேண்டிய அவசியம் தற்போது ஏற்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# எரிபொருள், வலுசக்தியை சிக்கனமாக பயன்படுத்த வழிகாட்டல்கள் வெளியீடு

கொழும்பு, மார்ச் 25

அரச நிறுவனங்கள் எரிபொருள் மற்றும் வலுசக்தியை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழிகாட்டல் ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் காரணமாக, எதிர்காலத்தில் நாட்டுக்கு எரிபொருளை இறக்குமதி செய்வதில் தடைகள் ஏற்படக்கூடும் என்பதால், தற்போதுள்ள எரிபொருள் கையிருப்புகளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கும் அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கும் இந்த வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் அனைத்து அரசியலமைப்புச் சார்ந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இந்த வழிகாட்டல் ஆலோசனைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர்கள் கடமைக்கு வருகை தரும் போது தனித்தனி வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, முடிந்தவரை பொதுப் போக்குவரத்துச் சேவைகள் அல்லது குழுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்த வேண்டும் எனவும், களப்பணிகளுக்காக குறைந்த எண்ணிக்கையிலான வாகனங்களைப் பயன்படுத்தும் வகையில் தினசரி போக்குவரத்துத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்சாரம் மற்றும் வலுசக்தியை சேமிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக, முடிந்தவரை இயற்கையான வெளிச்சத்தைப் பயன்படுத்தவும், குளிரூட்டிகளுக்குப் பதிலாக மின்விசிறிகளைப் பயன்படுத்தவும் அந்த வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.03.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## திருகோணமலை எண்ணெய்க் குதங்களின் முக்கியத்துவம்

இயற்கை அனர்த்தங்களாக இருந்தாலென்ன, மனித செயற்பாடுகளின் விளைவான அனர்த்தங்களாக இருந்தலென்ன அவற்றை தடுப்பதற்கு முன்னெச்சரிக்கையுடன் நடவடிக்கைகளை எடுக்காமல், அவை உயிரிழப்புகளையும் அழிவுகளையும் ஏற்படுத்திய பிறகு எல்லாம் தெரிந்தவர்கள் போன்று ஆலோசனைகள் கூறுவதில் எமது அரசியல்வாதிகள் திறமைசாலிகள்.

மத்திய கிழக்குப் போரின் விளைவான தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் திருகோணமலையில் உள்ள இரண்டாவது உலகப் போர்க்கால எண்ணெய்க் குதங்களைப் பற்றி வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருக்கும் கருத்தை நோக்கும்போது இவ்வாறுதான் எண்ணத் தோன்றுகிறது.

திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை மீண்டும் அபிவிருத்தி செய்வதே எரிபொருள் நெருக்கடிக்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதற்கான வழி என்று அமைச்சர் ஹேரத் "தி இந்து" பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் மீரா சிறினிவாசனுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

அந்த எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் உதவியுடனான திட்டத்தை துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்றும் அவர் கூறினார்.

"தற்காலிக தீர்வுகள் நிலைபேறானவை அல்ல. உலகளாவிய எரிபொருள் நெருக்கடி நிலைவரத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது எண்ணெயை களஞ்சியப்படுத்துவதற்கும் விநியோகிப்பதற்கும் நீண்டகால அடிப்படையிலான தந்திரோபயம் ஒன்று எமக்கு தேவையாக இருக்கிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

திருகோணமலையை ஒரு சக்திவள மையமாக அபிவிருத்தி செய்வதற்காக 2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தியாவுடனும் ஐக்கிய அரபு இராச்சியத்துடனும் முத்தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டது.

அந்த நடவடிக்கை 2024 நவம்பரில் பதவிக்கு வந்த பிறகு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் நிருவாகம் கேந்திர முக்கியத்துவ செயற்திட்டங்கள் தொடர்பில் கைச்சாத்திட்ட முக்கியமான முதல் புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் ஒன்றாக அமைந்தது.

ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி.) இந்தியாவின் ஈடுபாட்டுடனான செயற் திட்டங்களை கடுமையாக எதிர்த்து வந்த ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதால் திருகோணமலை குதங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பிலான இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை அவர்களின் கொள்கைகளில் ஏற்பட்டிருந்த பெரியதொரு மாற்றத்தை புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு குறித்து நின்றது. அந்த உடன்படிக்கைக்கு பின்னரான சுமார் ஒரு வருடத்தில் மூன்று தரப்புகளும் இதுவரையில் ஒரேயொரு தடவை மாத்திரமே சந்தித்திருப்பதாக கூறப்படுகிறது.

1987 சமாதான உடன்படிக்கைக்கு பின்னரான சுமார் நான்கு தசாப்தங்களில் பல்வேறு இலங்கை அரசாங்கங்களுடன் திருகோணமலை எண்ணெய்க் குதங்களை மீண்டும் அபிவிருத்தி செய்வது தொடர்பாக புதுடில்லி பேச்சுக்களை நடத்திவந்த போதிலும், ஆரம்ப இணக்கத்துக்கு அப்பால் திட்டத்தில் முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டதில்லை.

தற்போது உலகளாவிய எண்ணெய் விநியோகச் சங்கிலித்தொடரில் இடையூறு ஏற்பட்டு பொருளாதாரங்கள் பெரும் நெருக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கும் சூழ்நிலையில், பழைய ஐயுறவுகளை கைவிட்டு இந்தியாவின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் எதிர்கால எரிபொருள் பாதுகாப்பை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதிசெய்து கொள்வதே விவேகமான செயலாக இருக்கும்.

# டெக்சாஸ் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பாரிய வெடிப்பு

வாஷிங்டன், மார்ச். 25

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தின் போர்ட் ஆர்தரில் அமைந்துள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றில் வெடிப்பு சம்பவம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அப்பகுதி குடியிருப்பாளர்கள் உடனடியாக வீடுகளுக்குள்ளேயே பாதுகாப்பாக இருக்குமாறு மாநில அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த பாரிய வெடிப்பைத் தொடர்ந்து வானில் கரும் புகை சூழ்ந்துள்ளதோடு, வெடிப்புச் சத்தத்தினால் அருகில் உள்ள வீடுகள் கூட அதிர்வடைந்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இருப்பினும், இந்த வெடிப்புச் சம்பவத்தினால் இதுவரை உயிர்ச்சேதங்களோ அல்லது காயங்களோ ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகவில்லை.

ஆயினும், காற்றின் தரம் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நகரத்தின் மேற்குப் பகுதியில் வசிப்பவர்கள் கதவு மற்றும் ஜன்னல்களை மூடிக் கொண்டு வீட்டுக்குள்ளேயே இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து நடமாட்டமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(எ)

# வீடுகளுக்குள் புகுந்து கொள்ளை! பல ஆயுதங்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச். 25

வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையிடும் நபர் ஒருவர் கூர்மையான ஆயுதங்கள், வாள்களுடன் முல்லேரியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

முல்லேரியா பொலிஸ் குழுவினர் நேற்று அதிகாலை வல்பொல சந்தியில் மேற்கொண்ட விசேட சோதனையின் போது, 10 கிராமுக்கும் அதிகப்படியான "ஐஸ்" போதைப்பொருளை வைத்திருந்த நபரை கைது செய்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இவரிடம் போதைப் பொருளுக்கு மேலதிகமாக தராசு ஒன்றும் இருந்தமையால் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதன்போது, குறித்த தராசு மாலபே பகுதியிலுள்ள கடையொன்றில் திருடப்பட்டது என்றும், அதனை விற்பனை செய்யத் தயாராக இருந்ததாகவும் அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

அவரது வீட்டைச் சோதனை செய்தபோது கூர்மையான ஆயுதங்கள், வாள்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

இவற்றை அவர் குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்தினாரா என்பது குறித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சந்தேகநபர் எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் போன்றனவற்றைத் திருடி, ஒருவருக்கு விற்பனை செய்ததோடு, அந்தப் பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

மேலும், அவிசாவளை வீதியிலுள்ள இரும்பு விற்பனை நிலையமொன்றில் இரும்புப் பொருட்களைத் திருடி விற்றதாகவும், முல்லேரியா - அவிசாவளை வீதியில் 30, 000 ரூபாய் பணத்தை திருடியதாகவும் அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

விசாரணைகளின் அடிப்படையில், ஆறு குற்றச் சம்பவங்களுடன் இவருக்கு தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 38 வயதுடைய வல்பொல லலா என்ற சுமித்ர ஆராச்சிகே லலந்த குணவர்தன என தெரியவந்துள்ளது.

(எ)

# சஜின்வாஸ் குணவர்தன தொடர்ந்தும் மறியலில்!

கொழும்பு, மார்ச் 25


சட்டவிரோதமாக சொத்துக்களைச் சேர்த்ததாக சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவின் பிணை மனுவை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

அதன்படி, சந்தேக நபரை இம்மாதம் 31 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இலஞ்ச, ஊழல் ஆணைக் குழு அதிகாரிகள் மற்றும் சந்தேக நபரின் சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களைக் கருத்தில் கொண்ட பின்னர், கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ்.போதரகம இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். திட்டமிடாத செலவுகளை போராடி சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**இடபம்**
எந்த பிரச்னையையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். அரசாங்க விஷயம்நல்ல விதத்தில் முடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் அதிகரிக்கும். சூட்சுமங்களை உணர்வீர்கள். சிறப்பான நாள்.

**மிதுனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முக்கியத்துவம் தருவார்கள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் புது முயற்சிகள் வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**கன்னி**
கடினமான காரியம் எளிதாக முடிப்பீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்னகவலைகள் வந்து போகும். உறவினர் நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில்கவனம்செலுத்துவது நல்லது. பொறுமைத்தேவை.

**விருட்சிகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். கனவு நனவாகும்.

**தனுசு**
எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
குடும்பத்திலும் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும்.

**கும்பம்**
இதுவரை இருந்த சோர்வுகளைப்பு யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். மறதியால் பிரச்னை வந்து நீங்கும். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

# தொடர்ந்து 10 ஆவது ஆண்டாக "மக்களின் நிதி சேவை வர்த்தக நாமம்" பட்டம் வென்ற எல்.ஓ.எல்.சி. நிறுவனம்






SLIM Kantar People's Choice Awards 2026 -இல், எல்.ஓ.எல்.சி. ஹோல்டிங்ஸ் பிஎல்சி தொடர்ந்து பத்தாவது ஆண்டாக "ஆண்டின் சிறந்த மக்கள் நிதிச் சேவை நிறுவனம்" என்ற பட்டத்தை வென்று, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லை எட்டியுள்ளது.

இந்த குறிப்பிடத்தக்க சாதனை, பத்தாண்டுகால அசைக்க முடியாத மக்கள் நம்பிக்கையைக் குறிப்பதோடு, மற்ற அனைத்தையும் விட இலங்கையர்கள் தொடர்ந்து தேர்ந்தெடுக்கும் நிதிச் சேவை நிறுவனமாக எல்.ஓ.எல்.சி.யை உறுதியாக நிலைநிறுத்துகிறது.

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் மற்றும் காண்டார் வழங்கும் மக்கள் தேர்வு விருதுகளின் தனிச்சிறப்பு என்னவென்றால், அவை வர்த்தகநாம நுண்ணறிவு மற்றும் பகுப்பாய்வில் உலகளாவிய முன்னணி நிறுவனமான காண்டார் நடத்தும் சுதந்திரமான நுகர்வோர் ஆராய்ச்சியின் மூலம் முழுமையாகத் தீர்மானிக்கப்படுகின்றன. இந்த அங்கீகாரம், பொதுமக்களின் கருத்து, வர்த்தகநாம நினைவு மற்றும் வாடிக்கையாளர் விசுவாசம் ஆகியவற்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இது ஒரு வர்த்தக நாமத்திற்கு மக்களுடன் உள்ள உண்மையான தொடர்பின் மிகவும் நம்பகமான குறிகாட்டிகளில் ஒன்றாக அமைகிறது. ஒரு தசாப்த காலமாக "மக்களின் நிதிச் சேவைகள் வர்த்தகநாமம்" என்ற மறுக்கமுடியாத நிலையை அடைந்திருப்பது, அனைத்து இலங்கையர்களுடனும் எல்.ஓ.எல்.சி. கொண்டுள்ள நீடித்த உறவையும், தலைமுறைகளைக் கடந்து நீடிக்கும் நம்பிக்கையைத் தக்கவைத்துக்கொண்டு அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப தொடர்ந்து தன்னை மேம்படுத்திக் கொள்ளும் அதன் திறனையும் காட்டுகிறது.

பல ஆண்டுகளாக, எல்.ஓ.எல்.சி. ஒரு பாரம்பரிய நிதிச் சேவை வழங்குநர் என்ற நிலையைத் தாண்டிப் பரிணமித்துள்ளது. இது நாடு முழுவதும் உள்ள தனிநபர்கள், தொழில்முனைவோர் மற்றும் சமூகங்களின் முன்னேற்றத்திற்கான ஒரு நம்பகமான பங்குதாரராக உருவெடுத்துள்ளது. நிதிக்கான அணுகலை விரிவுபடுத்துவதன் மூலமும், டிஜிற்றல் புத்தாக்கத்திற்கு முன்னோடியாக இருப்பதன் மூலமும், நாடு தழுவிய அளவில் வலுவான இருப்பைப் பேணுவதன் மூலமும், எல்.ஓ.எல்.சி. தான் சேவை செய்யும் மக்களின் அபிலாஷைகளுடன் நெருக்கமாக இணைந்தே இருந்து வருகிறது. இந்தப் பண்பு, பத்தாண்டு கால இந்த அங்கீகாரத்தில் தெளிவாகப் பிரதிபலிக்கிறது.

நிதிச் சேவைகளுக்கு அப்பால், எல்.ஓ.எல்.சி. சமூகங்களுடனான தனது தொடர்பையும் வலுப்படுத்தியுள்ளது. இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறை பெருநிறுவனம் தலைமையிலான மனிதாபிமான முன்னெடுப்பான திவி சவியவை முன்னெடுத்து, ஒரு பொறுப்புள்ள பெருநிறுவனக் குடிமகனாகத் தனது பங்கை அது உறுதிப்படுத்துகிறது. மிகவும் அவசியமான தருணங்களில் சமூகத்தின் நாடித்துடிப்புக்கு செவிசாய்ப்பது, எல்.ஓ.எல்.சி.க்கு அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தவும், மிகச் சில நிறுவனங்களே உரிமை கோரக்கூடிய ஒரு தனித்துவமான, ஆழமான பிணைப்பை பொதுமக்களுடன் உருவாக்கவும் உதவுகிறது.

இந்த மைல்கல் குறித்து கருத்து தெரிவித்த எல்.ஓ.எல்.சி. ஹோல்டிங்ஸ் பி.எல்.சி குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஜெயவர்தன, "தொடர்ந்து பத்து ஆண்டுகளாக" ஆண்டின் சிறந்த மக்கள் நிதிச் சேவை வர்த்தகநாமம்" என்ற பட்டத்தைப் பெறுவது ஒரு மகத்தான கௌரவமாகும். ஏனெனில், இந்த அங்கீகாரம் நாங்கள் சேவை செய்யும் மக்களிடமிருந்தே நேரடியாகக் கிடைக்கிறது. ஒரு தசாப்த காலமாக, இலங்கையர்கள் எல்.ஓ.எல்.சி.யை தங்கள் நிதிப் பங்காளராக நம்பி வருகின்றனர். அந்த நம்பிக்கையே நாங்கள் செய்யும் அனைத்திற்கும் அடித்தளமாக விளங்குகிறது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லைக் கொண்டாடும் வேளையில், வாய்ப்புகளை விரிவுபடுத்துவதிலும், நிதி உள்ளடக்கத்தை வலுப்படுத்துவதிலும், இலங்கையின் மேன்மையை உலகிற்கு எடுத்துச் செல்வதிலும் நாங்கள் உறுதியாகக் கவனம் செலுத்துகிறோம" என்று குறிப்பிட்டார்.

இன்று, நான்கு கண்டங்களில் பரவியுள்ளதும் 27 நாடுகளில் வேகமாக வளர்ந்து வரும் இருப்பைக் கொண்டுள்ள எல்.ஓ.எல்.சி., தனது பயணத்தை வடிவமைத்த சமூகங்களில் ஆழமாக வேரூன்றியிருக்கும் அதே வேளையில், தனது தொலைநோக்குப் பார்வையை எல்லைகளுக்கு அப்பாலும் தொடர்ந்து எடுத்துச் செல்கிறது. உலகளாவிய இலட்சியம் மற்றும் உள்ளூர் தொடர்பு ஆகியவற்றின் இந்த சமநிலை, பொதுமக்களுடனான இந்த வர்த்தகநாமத்தின் நீடித்த பிணைப்பைத் தக்கவைப்பதில் முக்கியப் பங்காற்றியுள்ளது. இலங்கையர்கள் மீண்டும் ஒருமுறை இந்த வர்த்தகநாமத்திற்கு மகுடம் சூட்டும் வேளையில், ஒரு உண்மை தெளிவாகிறது: ஒரு தசாப்த காலமாக, மக்களின் தேர்வு எல்.ஓ.எல்.சி. தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சர்வதேச மசகு எண்ணெய் விலை மீண்டும் அதிகரிப்பு

## ஒரு பீப்பாய் 100 டொலரை கடந்தது

கொழும்பு, மார்ச். 25

சர்வதேச சந்தையில் பிரெண்ட் மசகு எண்ணெய் விலை மீண்டும் 100 அமெரிக்க டொலர்களைக் கடந்து அதிகரித்துள்ளது.

ஆசிய சந்தைகளில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி, மசகு எண்ணெய் விலை 3.75 சதவீதம் அதிகரித்து, 103. 69 அமெரிக்க டொலராக பதிவாகியது. இதேவேளை, நைமெக்ஸ் லைட் ஸ்வீட் மசகு எண்ணெய் விலை 3. 42 சதவீதம் அதிகரித்து 91. 55 அமெரிக்க டொலராக பதிவாகியது.

முன்னதாக, மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரிக்கும் சூழ்நிலையில், ஈரானுக்கு எதிரான புதிய தாக்குதல்களை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிறுத்தி வைத்ததுடன், விரைவில் சமாதான ஒப்பந்தம் எட்டப்படலாம் என்று தெரிவித்தமையால் திங்களன்று பிரெண்ட் மசகு எண்ணெய் விலை 10 சதவீதத்துக்கும் மேல் வீழ்ச்சியடைந்தது.

ஆனால், அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக கூறிய தகவலை தெஹ்ரான் மறுத்துள்ளதால், முதலீட்டாளர்கள் மீண்டும் எச்சரிக்கையுடன் செயல்பட்டு வருவதால் விலைகள் மீள அதிகரித்தன. (எ)

# ஊழல் ஒழிப்பு பிரிவினரால் சுங்க அதிகாரி கைதானார்

கொழும்பு, மார்ச். 25

இலங்கை சுங்கத்தின் மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், தற்போது சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள சுங்க அதிகாரி ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டார்.

மனித நுகர்வுக்கு பொருத்தமற்றவை என மருந்துப் பரிசோதகரால் பரிந்துரைக்கப்பட்ட பாமோயில் அடங்கிய 5 கொள்கலன்களை அழிக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும், அந்தப் பாமோயில் அடங்கிய கொள்கலன்களைத் தனிப்பட்ட முனையம் ஒன்றுக்கு எடுத்துச் சென்று, ஒரு கொள்கலனில் இருந்த பாமோயிலை 40 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்ததாக தெரியவந்துள்ளது.

பின்னர், குறித்த கொள்கலன்களில் இருந்த பாமோயில் அழிக்கப்பட்டதாக ஆவணங்களைச் சமர்ப்பித்து, அந்தக்கோப்பைத் தன்வசம் வைத்துக்கொண்டு ஒருவருக்கு அனுகூலம் வழங்கியதன் மூலம் "ஊழல்" எனும் குற்றத்தை புரிந்துள்ளார் என்ற குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டார். (எ)

# முடிந்தால் என்னை கைது செய்யுங்கள்

## அரசாங்கத்துக்கு கம்மன்பில சவால்

கொழும்பு, மார்ச். 25

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியை மார்ச் 31 ஆம் திகதி வெளிப்படுத்துவதை தடுக்கும் வகையில் 27 ஆம் திகதி என்னை கைது செய்ய அரசாங்கம் முயற்சிக்கிறது. முடிந்தால் கைது செய்யுங்கள் என்று அரசாங்கத்துக்கு சவால் விடுக்கிறேன். சானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோர் எவ்வாறு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்துக்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள் என்பதை மார்ச் 31 ஆம் திகதி ஆதாரத்துடன் வெளிப்படுத்துவேன் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியை மார்ச் 31 ஆம் திகதி பகிரங்கப்படுத்துவதற்கு உதய கம்மன்பில மார்ச் 27 ஆம் திகதி வெளியில் இருக்க வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறாயின் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் என்னை கைது செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. நான் இதுவரை காலமும் எந்த மோசடி மற்றும் துர்நடத்தைகளிலும் ஈடுபடவில்லை. அரசுக்கு சொந்தமான ஒரு பொருளை கூட வீட்டுக்கு கொண்டு செல்லவில்லை. ஆகவே, முடிந்தால் மார்ச் 27 ஆம் திகதி என்னை கைது செய்யுங்கள் என்று அமைச்சரவை பேச்சாளருக்கு சவால் விடுக்கிறேன். - என்றார். (எ)

# இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்

கொழும்பு, மார்ச். 25

நாட்டின் பல பகுதிகளில் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், தென், ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

அத்துடன் இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில பகுதிகளில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக் கூடும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் ஏனைய பகுதிகளில் பொதுவாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# 1820 லீற்றர் டீசலுடன் மற்றுமொருவர் கைது

கொழும்பு, மார்ச். 25

அனுமதிப்பத்திரமின்றி 1,820 லீற்றர் டீசலை வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை தொடர்பில் சேருனுவர பகுதியில் நேற்றுக்காலை சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கந்தளாய் பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இந்தத் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (எ)

# களுபோவில பகுதியில் சீனப் பெண் கொலை!

கொழும்பு, மார்ச். 25

களுபோவில பகுதியில் உள்ள வீடொன்றில், சீன நாட்டுப் பெண் ஒருவர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கி படுகொலை செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் பதிவானது.

உயிரிழந்தவர் 26 வயது சீன நாட்டுப் பெண் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் முன்னாள் காதலனான சீன நாட்டுப் பிரஜை ஒருவரே இந்தக் கொலையைச் செய்தமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

# ரயில் மோதி ஒருவர் பலி!

மாத்தறை, மார்ச். 25

மாத்தறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நூபே ரயில் மார்க்கத்துக்கு அருகில், ரயில் மோதி நபர் ஒருவர் உயிரிழந்தார்.

திங்கட்கிழமை மதியம் இந்தச் சம்பவம் பதிவானது.

மருதானையிலிருந்து பெலியத்த நோக்கி பயணித்த ரயில் மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது, காயமடைந்த அவர், மாத்தறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் ஹாமுவத்த பகுதியைச் சேர்ந்த 59 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஏறாவூரில் இருவர் மீது சரமாரி வாள்வெட்டு!

மட்டக்களப்பு, மார்ச். 25

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏறாவூர் முதலாம் பிரிவு, இளையவன் வீதியில் நேற்று முன்தினம் இரவு இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற கண்காட்சி ஒன்றின் போது, இரு தரப்பினருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் இரவு 09. 00 மணியளவில் ஒரு குழுவினர் மற்றைய தரப்பினரின் வீட்டுக்குச் சென்று வாள்வெட்டு தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த இரு இளைஞர்களும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி திடீர் இடமாற்றம்

கொழும்பு, மார்ச். 25

மேல் மாகாண வடக்கு பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாக பணியாற்றிய பிரதான பொலிஸ் பரிசோதகர் லின்டன் டி சில்வா உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முதல் பொலிஸ் மருத்துவ சேவைப் பிரிவுக்கு இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டார். (எ)

# மட்டக்களப்பில் கடத்தல் சம்பவம்: சந்தேகநபர்களுக்கு தடுப்பு காவல்

மட்டக்களப்பு, மார்ச். 25

மட்டக்களப்பில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய பெண் கொலை மற்றும் நகைக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நான்கு நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய மட்டக்களப்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 20ஆம் திகதி வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொத்தியாபுலை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கடத்தப்பட்டு, அவரது நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

பின்னர் அவர் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள நெல்லியடி வயல் பிரதேச கிணறு ஒன்றினுள் வீசப்பட்டிருந்தார். இதே கிணற்றிலிருந்து ஏற்கனவே காணாமல் போனதாகக் கருதப்பட்ட மற்றொரு பெண்ணின் சடலமும் மீட்கப்பட்டது.

இந்தக் கொடூரச் சம்பவங்கள் தொடர்பில் பிரதான சந்தேகநபர்கள் மூவர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில், நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியாமல் போனதால், நீதிவான் அ. தர்சினியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் அவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிவான், பிரதான சந்தேகநபர்கள் மூவரையும் 04 நாட்களுக்குப் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கினார்.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளைக் கொள்வனவு செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட ஏனைய இருவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு தொடர்பான அடுத்தகட்ட விசாரணை எதிர்வரும் 27ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (எ)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 800 லீற்றர் டீசல் பதுக்கியவர் கைது

அக்கரைப்பற்று, மார்ச். 25

அம்பாறை- ஆலையடிவேம்பு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில், சட்டவிரோதமான முறையில் கொள்கலன்களில் 800 லீற்றர் டீசலை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில், அங்கு பணியாற்றும் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில், குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை முற்றுகையிட்ட பொலிஸார், கொள்கலன்களில் நிரப்பப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த 800 லீற்றர் டீசலை கண்டுபிடித்து மீட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அங்கு கடமையாற்றும் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# அனுபவமில்லாத ஆட்சியாளர்களின் நிர்வாகத்தால் நாட்டு மக்கள் பாதிப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச். 25

எரிபொருள் கட்டமைப்பில் கறுப்புச் சந்தையை அரசாங்கமே உருவாக்கியுள்ளது. எரிபொருள் விலையேற்றத்துக்கமைய பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும். அனுபவமில்லாத ஆட்சியாளர்களின் நிர்வாகத்தால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அரசாங்கம் தாமதமாகவே தீர்மானங்களை எடுக்கிறது. டித்வா புயல் தாக்கத்தின் போது அரசாங்கம் தாமதமாகவே செயல்பட்டது. இதனால், விளைவுகள் பாரதூரமானதாக அமைந்தன.

மத்திய கிழக்கு நாடுகளில் மோதல் நிலைமை ஆரம்பித்த நாளில் இருந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என்று அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்தினோம். எமது யோசனைகளை ஜனாதிபதி அலட்சியப்படுத்தினார்.

எதிர்வரும் ஒன்றரை மாதத்துக்குரிய எரிபொருள் கையிருப்பில் இருப்பதாக குறிப்பிடப்பட்டது. ஆனால், இந்த மாதம் மாத்திரம் மூன்று தடவைகள் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. கையிருப்பில் எரிபொருள் இருக்குமாயின் ஏன் எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டும்.

நியாயமற்ற வகையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, எரிபொருள் விலைக்கமைய பேருந்து கட்டணத்தை அதிகரிக்க வேண்டும். எரிபொருள் விநியோகத்தை தடையின்றி வழங்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கமே எரிபொருள் கறுப்புச் சந்தையை உருவாக்கியுள்ளது."- என்றார். (எ)

# எமது காணியை எமக்கு தாருங்கள் கனகர்கிராம மக்கள் போராட்டம்



பொத்துவில், மார்ச். 25

நாம் பூர்வீகமாக வாழ்ந்த எமது காணியை எமக்கு தாருங்கள். அரைகுறை குடியேற்றம் வேண்டாம் என்று அம்பாறை- பொத்துவில் கனகர்கிராம மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொத்துவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கனகர்கிராம மக்கள், தமது காணிகளை வழங்கி மீள்குடியேற்றுமாறு கோரியும் ஏற்கனவே மீள்குடியமர்த் தப்பட்டவர்களுக்கு அடிப்படை வசதிகளை பெற்றுத்தரக் கோரியும் திங்கட்கிழமை இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# வவுனியா பல்கலைக்கழகத்தில் ஊடகி சஞ்சிகை வெளியீடு

வவுனியா, மார்ச். 25

வவுனியா பல்கலைக்கழகத்தின் தொலைதூர மற்றும் தொடர் கல்விக்கான நிலையத்தினால் நடத்தப்பட்ட ஊடகக் கற்கைகள் மற்றும் இதழியல் உயர் சான்றிதழ் கற்கை நெறி மாணவர்களால் ஊடகி சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு வவுனியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

ஊடகக் கற்கைகள் மற்றும் இதழியல் உயர் சான்றிதழ் கற்கை நெறி மாணவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் அருளம்பலம் அற்புதராஜா பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

விருந்தினர்கள் இணைந்து ஊடகி சஞ்சிகையை வெளியிட்டு வைத்ததுடன், குறித்த சஞ்சிகை யானது.

ஊடகக் கற்கைகள் மற்றும் இதழியல் உயர் சான்றிதழ் கற்கை நெறி மாணவர்களால் ஊடகி - இதழ் 1 என வெளியிடப்பட்



டுள்ளது.

குறித்த சஞ்சிகையில் கவிதைகள், வன்னி தொடர்பான தகவல்கள், பட்டலந்த வதைமுகாம், ஊடகம் மற்றும் பெண்களின் ஒப்பீடு, வரலாற்று ஆய்வுகள், வடக்கு கடல்வளம் அழிவடைதல் தொடர்பான இலங்கை, இந்திய அரச பார்வைகள், போதைப்பொருளால் ஏற்படும் சமூக சீர்கேடுகள், சர்வதேச அரசியலின் இராஜதந்திர வெளியுறவு கொள்கை மற்றும் தகவலறியும் உரிமைச்சட்டம் தொடர்பான தெளிவூட்டும் தகவல்கள் என பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (எ)

# ஒரே வாரத்தில் ரூ. 38,000 சரிந்தது தங்கம் விலை!

கொழும்பு, மார்ச். 25

உலக சந்தையில் தங்கத்தின் விலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்துக்கு ஏற்ப, இலங்கையிலும் நேற்று தங்கத்தின் விலை மேலும் 5,000 ரூபாயால் குறைவடைந்தது.

இது கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் சுமார் 38,000 ரூபாய் வீழ்ச்சியாகும்.

இதன்படி, கடந்த வாரம் 17ஆம் திகதி 408,000 ரூபாயாகக் காணப்பட்ட 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை நேற்று 370,000 ரூபாயாகப் பதிவானது.

இதேவேளை, கடந்த வாரம் 17ஆம் திகதி 375,300 ரூபாயாக காணப்பட்ட 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை நேற்று 340,400 ரூபாயாக வீழ்ச்சியடைந்தது. (எ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்திய பிரதமர்...

நரேந்திர மோடியுடன் நேற்று மாலை தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடினார். வளர்ந்து வரும் இந்த நிலைமைகள் பிராந்திய மற்றும் உலகளாவிய விநியோக வலையமைப்புகளில் ஏற்படுத்தும் பாதகமான தாக்கங்கள் குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் இங்கு மிகுந்த கவனம் செலுத்தியதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான வலுசக்தி ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (அ)

## ஐ.நா. வதிவிட...

பிரச்சினைகள், சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றம், மீள்திறன் கொண்ட வாழ்வாதாரம் ஆகிய நான்கு பிரதான விடயங்களின் அடிப்படையில் ஆளுநர் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

முக்கியமாகக் காணிப் பிரச்னைகள் தொடர்பில் சுட்டிக்காட்டிய ஆளுநர், கடந்த காலப் போர்ச் சூழல் காரணமாகப் பலரது காணி ஆவணங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. தற்போது மக்களிடமும் காணி ஆவணங்கள் இல்லை, அரச திணைக்களங்களிடமும் அதற்கான பதிவுகள் இல்லை. இதனால் தமது காணிகளுக்கான உரித்துகளை உறுதிப்படுத்த முடியாமல் மக்கள் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.

இப் பிரச்னைகளுக்குத் தீர்வு கோரி மக்கள் தொடர்ச்சியாகப் பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் ஆளுநர் செயலகத்துக்கும் அதிகளவில் வருகை தருகின்றனர். எனவே, அவர்களின் காணிப் பிணக்குகளைத் துரிதமாகத் தீர்த்து, உரிய காணி உரித்துகளை வழங்க வேண்டியது எமது மிக முக்கிய தேவையாகும். இதற்காக அரசாங்கம் ஏற்கனவே "ஹிமிகம" (உரிமை) திட்டத்தையும் ஆரம்பித்துள்ளது," எனத் தெரிவித்தார்.

அத்துடன், சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சிகளை மேம்படுத்துதல், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒற்றைச் சாளர முறைமையை உருவாக்குதல், காணி விடுவிப்பு மற்றும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான தொழில்நுட்ப ஆதரவைப் பெறுதல், மற்றும் பசுமைக் காலநிலை நிதி போன்ற சர்வதேச நிதியங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஐ.நா.வின் ஒத்துழைப்புக்கள் மாகாணத்துக்கு அவசியம் என்பதையும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர், வடக்கு மாகாணத்தின் தனித்துவமான உணர்திறன்களையும் சவால்களையும் ஆளுநர் மிகவும் நுட்பமாகக் கையாளுவதைப் பாராட்டினார். அண்மைய வெள்ளப் பேரிடரின்போது அரசாங்கம் மற்றும் கிராம அலுவலர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளின் அர்ப்பணிப்பான சேவைகளை அவர் விதந்துரைத்தார்.

அரசாங்கத்தின் உதவித் திட்டங்களுக்கு சமாந்தரமாக, ஐ.நா. முகவர் அமைப்புகளான யுனிசெப் போன்றவை மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் குழுக்களை, குறிப்பாகத் தனித்து வாழும் தாய்மார், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மலையகத் தமிழ் சமூகத்தினரை இலக்காகக் கொண்டு துரித நிவாரணங்களை வழங்கியமையை அவர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் உலகளாவிய நிலைமைகள் குறித்துப் பேசிய அவர், இலங்கை போன்ற நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்கான சர்வதேச நன்கொடையாளர்களின் நேரடி நிதியுதவிகள் தற்போது பெருமளவில் சுருங்கியுள்ள யதார்த்தத்தைத் தெளிவுபடுத்தினார்.

எவ்வாறாயினும், பசுமைக் காலநிலை நிதி, இழப்பு மற்றும் சேத நிதி, கடன் பரிமாற்றங்கள் மற்றும் தனியார் முதலீடுகளை ஈர்க்கக்கூடிய அபிவிருத்திப் பத்திரங்கள் போன்ற புதிய நிதியீட்டல் முறைகள் ஊடாக வடக்கு மாகாணத்துக்கு அதிகபட்ச உதவிகளை வழங்க ஐ.நா. தயாராகவுள்ளது எனக் குறிப்பிட்டார். அத்துடன், "கொழும்பில் வடக்கு மாகாணத்துக்கான ஒரு தூதராக ஐ.நா. தன்னை உணர்கின்றது" எனக் குறிப்பிட்ட அவர், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் முதலீடுகளை வடக்கிற்கு ஈர்ப்பதற்குத் தொடர்ந்து குரல்கொடுப்பதாக உறுதியளித்தார்.

முதலீட்டாளர்களை வடக்கு மாகாணத்தை நோக்கி ஈர்ப்பதற்குத் தடையாக உள்ள கடுமையான அதிகாரத்துவ நடைமுறைகள் மற்றும் அனுமதிகளைப் பெறுவதிலுள்ள தாமதங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. வினைத்திறனான ஒற்றைச் சாளர முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். அதேவேளை, அரசாங்கம் மற்றும் மாகாண சபைக்கு ஒதுக்க ப்படும் நிதிகளைத் துரிதமாகச் செலவிடுவதற்கும், கொள்முதல் நடைமுறைகளை விரைவுபடுத்துவதற்கும் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கவும் ஐ.நா. தயாராகவுள்ளது என்றார். ஆளுநரால் சுட்டிக்காட்டப்பட்ட காணி முரண்பாடு கள், காணி விடுவிப்புச் செயன்முறைகள் மற்றும் நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட உட்கட்டமைப்பு வேலைத்திட்டங் களுக்கும் முழுமையான ஆதரவு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஆளுநர் மற்றும் ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளரின் உரைகளைத் தொடர்ந்து விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர்கள், தமது மாவட்டங்களில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் ஆகியனவற்றுடன் தொடர்புடையதாக மக்கள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்சினைகள் குறித்து விரிவாகச் சுட்டிக்காட்டினர். அதேபோல, கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலரும், தமது மாவட்டத்தில் நிலவும் பல்வேறுபட்ட காணிப் பிணக்குகள் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

இறுதியாகக் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண காணி ஆணையாளர், மாகாணத்தில் சுமார் 2 இலட்சம் காணி ஆவணங்கள் கையாளப்பட வேண்டியுள்ளதைக் சுட்டிக்காட்டினார். தற்போதுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியைக் கொண்டு, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இந்தப் பணியை நிறைவு செய்வதற்கு, சேவையிலீடுபடும் உத்தியோகத்தர்களுக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இந்த உயர்மட்டக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம், மாவட்டச் செயலாளர்கள், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு முகவர் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## ஐ.நா வதிவிட பிரதிநிதி...

இந்தச் சந்திப்பின்போது, இலங்கையின் தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நகர்வுகள் குறித்து டான் குழுமத் தலைவர் எஸ்.எஸ். குகநாதன் ஐ.நா. பிரதிநிதிக்குத் தெளிவுபடுத்தினார். குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள், மக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் நல்லிணக்க முயற்சிகளில் ஊடகங்கள் வகிக்கும் முக்கியத்துவம் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மக்களுக்கு உண்மையான மற்றும் துல்லியமான தகவல்களைக் கொண்டு சேர்ப்பதில் டான் ஊடக வலையமைப்பு முன்னெடுத்து வரும் பணிகளைப் பாராட்டிய மார்க் அண்ட்ரே பிரான்ஞ், நாட்டின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஊடகங்களின் சுதந்திரமான செயற்பாடு மிகவும் அவசியம் என்பதையும் சுட்டிக்காட்டினார். இந்த விஜயத்தின் ஒரு அங்கமாக, ஈழநாடு பத்திரிகையின் நேர்காணலில் அவர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கைக்கான நிதி...

போதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி எவ்வாறு ஒத்துழைக்க முடியும் என்பது குறித்து இச்சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், 'டித்வா' அனர்த்த நிலைக்குப் பின்னர் நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

பேரிடருக்குப் பிந்தைய நிலைமை மற்றும் தற்போதைய மத்திய கிழக்கு போர்ச் சூழலுக்கு மத்தியிலும் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக அரசாங்கம் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் இதன்போது பாராட்டுத் தெரிவித்தார்.

மேலும், 'டித்வா' சூறாவளியினால் சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைக்கத் தேவையான எந்தவொரு உதவியையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'டித்வா' சூறாவளி அனர்த்த நிலைமையின் போது ஆசிய அபிவிருத்தி வங்கி இதுவரை வழங்கிய உதவிகளையும், இலங்கையுடன் பேணிவரும் விரிவான அபிவிருத்தி ஒத்துழைப்பையும் பாராட்டிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரமாகப் பேணி பொருளாதார அபிவிருத்தியை எட்டுவதே தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனத் தெரிவித்தார்.

'டித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்களை நேரில் கண்டு கொள்ள தமக்கு வாய்ப்புக் கிடைத்ததாக இதன்போது குறிப்பிட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர்,

மத்திய மலைநாட்டின் நீர் கட்டமைப்புகளைப் பாதுகாத்து, மீண்டும் இத்தகையதொரு நிலைமை ஏற்படாதிருக்கத் தேவையான திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சார்பில் அதன் தெற்காசிய பிராந்திய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சோனா சிரேஸ்தா, தலைவர் அலுவலகத்தின் பிரதம ஆலோசகர் கெயிச் சிரோ இனுய், தலைவர் அலுவலகத்தின் சிரேஷ்ட ஆலோசகர் மனிஷா பிரதானாங்கா உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.(அ)

## சமையல் எரிவாயு...

தெரிவித்துள்ளது.

மார்ச் 28 ஆம் திகதி 22,000 மெற்றிக் தொன்னும், அதனைத் தொடர்ந்து ஏப்ரல் மாதத்தில் மேலும் 22,000 மெற்றிக் தொன் திரவ பெற்றோலிய எரிவாயுவும் லிட்ரோ காஸ் நிறுவனத்திற்கு வரும் எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அதேநேரம், தனியார் விநியோக நிறுவனமான லாப்ஸ் காஸ், மார்ச் 30 மற்றும் 31 ஆகிய திகதிகளில் 8,000 மெற்றிக் தொன்கள், ஏப்ரல் 25-27 ஆகிய திகதிகளில் 21,000 மெற்றிக் தொன்கள் என திரவ பெற்றோலிய எரிவாயுவை இலங்கைக்கு அனுப்பவுள்ளதாக அரசாங்கத்திற்குத் தகவல் தெரிவித்துள்ளது.

லாப்ஸ் காஸ் நிறுவனம் வழக்கமாக உள்ளூர் சந்தைக்கு மாதத்திற்கு 7,000 முதல் 8,000 மெற்றிக் தொன்கள் வரை சமையல் எரிவாயுவை விநியோகம் செய்கிறது.

இரு விநியோகஸ்தர்களிடமிருந்தும் வரும் ஒருங்கிணைந்த எரிவாயு அளவுகள் தேசிய தேவையை மிஞ்சும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

எனினும், விநியோகம் தொடர்பான சிக்கல்கள் இருப்பதை அவர் ஒப்புக்கொண்டார். தேவைப்பட்டால் மேலதிக எரிவாயு ஏற்றுமதிகளைக் கையாளுவதற்காக அம்பாந்தோட்டையில் உள்ள தனது சேமிப்புக் கிடங்குகளை வழங்க லாப்ஸ் நிறுவனம் கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்த கருத்து குறித்து கேள்வி எழுப்பட்ட போது, அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் கூறினார். (அ)

## நிர்வாக...

சென்றுள்ளார்.

2020 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி முதல் 2023 ஒகஸ்ட் 28 வரை தனது முதலாவது பதவிக் காலத்தையும், 2023 ஒகஸ்ட் முதல் நேற்று 2026 மார்ச் 24 வரை இரண்டாவது பதவிக் காலத்திலும் துணைவேந்தராகப் பதவி வகித்த பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா இன்று மார்ச் 25 ஆம் திகதி தனது 65 ஆவது அகவையை நிறைவு செய்து 66 ஆவது அகவைக்குள் காலடி பதிக்கிறார்.

எதிர்வரும் ஒகஸ்ட் 28 திகதி வரை ஜனாதிபதியினால் இவருக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தபோதிலும், 65 வயதை நிறைவு செய்த பின்னர் நிர்வாகப் பதவிகளை வகிப்பதற்குப் பல்கலைக்கழக சட்டம் இடமளிக்காததன் காரணமாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் தானாகக் கேட்டு, அடுத்த துணைவேந்தருக்கான தெரிவை உரிய காலத்தினுள் நடத்தி, இன்று புதிய துணைவேந்தரிடம் பதவியைக் கையளிக்கவிருக்கிறார். எனினும், பல்கலைக்கழகச் சட்ட ஏற்பாடுகளின் படி, அவர் பணியாற்றும் விஞ்ஞான பீடத்தின் நடப்புக் கல்வியாண்டு நிறைவு பெறும் - எதிர்வரும் செப்ரெம்பர் 30 வரை அவர் தனது கல்விப் பணியில் தொடர்ந்தும் கணிதவியல் பேராசிரியராகச் சேவையாற்றுவார். (ஒ)

## உரக் கையிருப்பை...

இணைந்து வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அறிவுறுத்தினார்.

விவசாய அமைச்சின் அதிகாரிகள் மற்றும் உர இறக்குமதி நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக விநியோகச் சங்கிலிகளுக்கு ஏற்பட்டுள்ள தடைகளுக்கு மத்தியில், இம்முறை சிறு போகத்தில் நெற்செய்கை மற்றும் ஏனைய பயிர்களுக்குத் தேவையான உரங்களைச் சந்தையில் போதுமான அளவு கையிருப்பில் வைத்திருப்பதற்கும், அதற்காக எடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

2026 சிறு போகத்தில் 5.5 இலட்சம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. நெற்செய்கைக்கு 83,000 மெற்றிக் தொன் யூரியாவும், ஏனைய பயிர்களுக்கு 42,000 மெற்றிக் தொன் யூரியாவும் என மொத்தம் 125,000 மெற்றிக் தொன் யூரியா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

சிறு போகம் ஆரம்பிக்கப்பட்ட மார்ச் 1ஆம் திகதி நிலவரப்படி நிறுவனங்களிடம் 95,000 மெற்றிக் தொன் யூரியாவும் விநியோகஸ்தர்களிடம் 7 000 மெற்றிக் தொன் யூரியாவும் என மொத்தமாக 102 000 மெற்றிக் தொன் கையிருப்பில் இருந்தது. எனினும், கடந்த இரு வாரங்களில் மட்டும் 27,000 மெற்றிக் தொன் உரம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதனால் மார்ச் 17ஆம் திகதி நிலவரப்படி நிறுவனங்களிடம் 68,000 மெற்றிக் தொன் யூரியா மட்டுமே கையிருப்பில் உள்ளதாக இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மார்ச் மாதத்தில் சுமார் 11 00 மெற்றிக் தொன் யூரியா விநியோகிக்கப்பட இருந்தாலும் உரத் தட்டுப்பாடு ஏற்படும் என்ற கருத்தின் காரணமாக உரம் சேமித்து வைக்கப்பட்டதால் 27 000 மெற்றிக் தொன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும் 77,000 மெற்றிக் தொன் யூரியா கொள்வனவு செய்வதற்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் 37 000 மெற்றிக் தொன் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வர வேண்டியிருந்ததால் அது தொடர்பில் நிச்சயமற்ற தன்மை நிலவினாலும், எஞ்சிய 40 000 மெற்றிக் தொன்னில் 21,000 மெற்றிக் தொன் உரம் மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் தொடக்கத்தில் இலங்கைக்கு வரவுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. (அ)

## அர்ச்சுனாவுக்கு...

பொதுக் கருத்துக்கள் மலையகத் தமிழர் சமூகத்தை இழிவுபடுத்தும் வகையிலும், பிரதேச வாதத்தையும் சமூக அமைதியையும் சீர்குலைக்கும் விதத்திலும், வெறுப்புப் பேச்சாகவும் அமைந்துள்ளதாக முறைப்பாட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ)

## ரஷ்யாவிலிருந்து...

பெற்றுக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

ரஷ்யாவின் எரிசக்தி பிரதி அமைச்சர் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளதாகவும், இதன்போது இது குறித்து விரிவாக ஆலோசிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான ஈரான் தூதுவர், எரிபொருளை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தமை குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர், அந்த முன்மொழிவை வரவேற்பதாகவும், இருப்பினும் கப்பல் வசதிகளைக் கொண்ட நாடுகளே அத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்த முடியும் என்றும், இலங்கைக்கு தற்போதைக்கு அந்த வசதி இல்லை என்றும் சுட்டிக்காட்டினார். தற்போது பல எரிபொருள் முன்பதிவுகள் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அவற்றில் சில எரிபொருள் கப்பல்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நாட்டை வந்தடையவுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

## சட்ட அமுலாக்கத்துறை...

ரவி கருணாநாயக்க, அநுர பிரியதர்ஷன யாப்பா, பிரேம்நாத் சி.தொலவத்த ஆகியோர் உள்ளடங்கலாக 18 பேர் இக்கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். நாட்டில் தொடர்ச்சியாகப் பதிவாகி வரும் துப்பாக்கிச்சூடு மற்றும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பில் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன் கடந்த பெப்ரவரி 13 ஆம் திகதி பட்டப்பகலில் சட்டத்தரணி புத்திக மல்லவாரச்சி மற்றும் அவரது மனைவி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

"இந்தச் சம்பவம் நீதித்துறையினர் மத்தியில் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் 14 ஆண்டுகளின் பின்னர் ஒரு அசாதாரண நடவடிக்கையாக அச்சங்கத்தில் அங்கம் வகிக்கும் 3500 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளுக்கு அழைப்பு விடுத்து பொதுக்கூட்டத்தைக் கூட்டியது. அதில் கடந்த பெப்ரவரி 16 ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள சட்டத்தரணிகள் அனைவரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவேண்டும் என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதன் விளைவாக அன்றைய தினம் உயர்நீதிமன்றம் முதல் நீதிவான் நீதிமன்றங்கள் வரை நாட்டிலுள்ள சகல நீதிமன்றங்களும் மூடப்பட்டன. அத்தோடு அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த ஆயிரக்கணக்கான வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டன" என்று அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தனியார்துறையின் பங்களிப்பு அவசியம்!

## ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 25

இலங்கையின் அடுத்தகட்ட பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு தனியார் துறை முதலீடுகள் மிக முக்கியமானவை என ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசாடோ காண்டா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அவர், கொழும்பில் தனியார் துறைத் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

இலங்கையின் முதலீட்டு சவால்கள் மற்றும் வளர்ந்து வரும் வாய்ப்புகள் குறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர், இலங்கை தற்போது உற்பத்தித்திறன், ஏற்றுமதி மற்றும் அதிகரித்த தனியார் துறை ஈடுபாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு வளர்ச்சி மாதிரியை நோக்கி நகர்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாற்றம் நாட்டின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தனியார் துறை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி தனது முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள், திட்டத் தயாரிப்புகள், தனியார் மூலதனத்தை ஈர்ப்பதற்கான இடர் - பகிர்வு வழிமுறைகள் ஆகியவற்றின் ஊடாக ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்ந்து ஆதரவு வழங்கும் என உறுதியளித்தார்.

"எமது கலந்துரையாடல் மிகவும் முக்கியமானது. நாம் ஒன்றிணைந்து முதலீடுகளை பொருளாதார வளர்ச்சியாக மாற்றுவோம்" எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசாடோ காண்டா தெரிவித்துள்ளார். (அ)

# சுற்றுலா சென்றவர்கள் மீது பொலிஸார் கடும் தாக்குதல்

## இருவர் மருத்துவமனையில் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச். 25

பருத்தித்துறையில் இருந்து மணல்காட்டுக்கு சுற்றுலா சென்றவர்களைச் சிவில் உடையில் அங்கு நின்ற பொலிஸார் கொடூரமாக தாக்கியுள்ளனர் என குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

மேலாடை இன்றி மது அருந்தியவாறு இருந்த காங்கேசன் துறை மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரே இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் படுகாயமடைந்த இருவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-05)

# ஆசிரியர்கள் இடமாற்றத்தை துரிதமாக வழங்கவேண்டும்!

## வடக்கு ஆளுநர் செயலகம் முன் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், மார்ச். 25

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இடமாற்ற சபையால் இடமாற்றப் பட்டியலிடப்பட்டுள்ளவாறு ஆசிரியர்களின் இடமாற்றத்தை துரிதமாக வழங்கக் கோரி கடந்த 8 வருடத்துக்கும் மேலாக வெளி மாவட்டங்களில் சேவையை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை முன்னெடுத்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக முன்னெடுக்கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டத்தில்,

"8 வருடத்துக்கும் மேலாக வெளி மாவட்டத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்களை வஞ்சிப்பதேன்?,

வெளிமாவட்ட ஆசிரியர்கள் இடமாற்ற உரிமை இழந்தவர்களா?, வதைக்காதே வதைக்காதே நல்நாற்றுக்களை நாலிரண்டு ஆண்டுகளாய் நாட்டியோரை காலம் தாழ்த்தி வதைக் காதே, நியமன கடிதத்தின் நியமன காலம் முடிந்த எமக்கு மேல திக தண்டனை எதற்கு?, யாரும் போக மாட்டோமென வேறு திசை பார்க்க நாமி ருக்கோம் என வந்த எமை நீடு காலம் நீட்டி வாட்டி வதைப் பது தான் நீதியா?"

உள்ளிட்ட பல்வேறு கோஷங்களுடன் பதாகைகளை தாங்கி போராட்டத்தை முன்னெடுத்தனர். (எ-05)

# எரிபொருள்களின் சீரான விநியோகம் யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிபொருள் விநியோகத்தை சீரான பொறிமுறை ஊடாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடல், மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று காலை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் எரிபொருள் விநியோகத்தை ஒரே சீரான பொறிமுறை ஊடாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உரிய அறிவுறுத்தல்கள் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டதுடன், அத்தியாவசிய உணவுப் பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்து வருதல், உள்ளூர் உற்பத்திப் பொருள்களை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லுதல், விவசாயம், மீன்பிடி போன்ற அத்தியாவசிய தேவைப்பாடுகளுக்கு எரிபொருள் விநியோகத்தை சீராக வழங்குதல் தொடர்பாகவும், மேலதிக எரிபொருள் விநியோகம் தொடர்பாக உரிய வழிகாட்டுதல்களைப் பெற்று வழங்குவது தொடர்பாகவும் அரசாங்க அதிபரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், பிரதம கணக்காளர், பிரதம பொறியியலாளர், திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டனர். (அ)

# இணுவில் பகுதியில் தாக்குதல் சம்பவம்!

## நான்கு பேர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச். 25

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இணுவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் நால்வர் காயமடைந்தனர்.

இணுவில் பகுதியைச் சேர்ந்த ஒருவர் உடுவில் - மல்வம் பகுதியை சேர்ந்த பெண்ணொருவரை திருமணம் செய்துள்ளார்.

பின்னர் அங்கு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக மனைவியை விட்டுவிட்டு இணுவில் பகுதியில் உள்ள தனது வீட்டுக்கு சென்றுள்ளார். இந்த நிலையில், இது குறித்து கேட்பதற்காக அந்தப் பெண்ணின் உறவினர்கள் மூவர் குறித்த நபரின் வீட்டுக்குச் சென்றனர்.

இதன்போது குறித்த நபருக்கும் பெண்ணின் உறவினர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில் வீட்டுக்கு உள்ளே சென்ற நபர் புகையிலை வெட்டும் கத்தியை எடுத்து வந்து மூவர் மீதும் கொடூர தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

குறித்த தாக்குதலில் பெண் வீட்டைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்ததுடன் மற்றையவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அவர்கள் தற்காப்புக்காக குறித்த நபர் மீது மேற்கொண்ட தாக்குதலில் அவரும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்த நிலையில், காயமடைந்த நால்வரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இது குறித்து சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# ஜனாதிபதி செயலக ஊழியர் செலவினம் 925 மில்லியன் ரூபாவையும் தாண்டியது!

கொழும்பு, மார்ச் 25

ஜனாதிபதி செயலகம் தனது ஊழியர்களுக்காக 2025 ஆம் ஆண்டில் மாத்திரம் சுமார் 925.14 மில்லியன் ரூபாயைச் செலவிட்டுள்ளதாகத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பெறப்பட்ட தகவல்கள் தெரிவிப்பதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் நிரந்தர ஊழியர்களுக்காக ரூ.796.53 மில்லியனும், ஏனைய வகை ஊழியர்களுக்காக ரூ. 128.61 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளன.

தற்போது ஜனாதிபதி செயலகத்தில் மொத்தம் 746 ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர்.

நிரந்தர ஊழியர்களாக 641 பேரும் (இவர்களில் 33 பேருக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.) ஏனைய ஊழியர்கள் எனும் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையிலான 06 ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஓய்வுபெற்ற ஐந்து ஊழியர்களும் தற்காலிக ஊழியர்களாக 89 பேரும் ஆலோசகர்களாக 05 பேரும் கடமையாற்றுகின்றனர்.

நிரந்தர ஊழியர்களுக்காகச் செலவிடப்பட்ட தொகையில், வேதனத்திற்காக 381.03 மில்லியன் ரூபாயும், மேலதிக நேர கொடுப்பனவுக்காக 59.5 மில்லியன் ரூபாயும், இதர கொடுப்பனவுகளுக்காக 307.8 மில்லியன் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளன.

அத்துடன் எரிபொருளுக்காக 27.6 மில்லியன், போக்குவரத்துக்காக 13.5 மில்லியன், தொலைபேசி கொடுப்பனவாக 3.6 மில்லியன் மற்றும் சொத்து கடன் கொடுப்பனவாக 3.2 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஏனைய ஊழியர்களுக்கான வேதனத்திற்காக 66.9 மில்லியன் ரூபாயும், மேலதிக நேர கொடுப்பனவுக்காக 16.2 மில்லியன் ரூபாயும், இதர கொடுப்பனவுகளுக்காக 33.6 மில்லியன் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளன. மேலும் எரிபொருளுக்காக 8.5 மில்லியன், போக்குவரத்துக்காக 2.4 மில்லியன் மற்றும் தொலைபேசி கொடுப்பனவாக 8 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளன.

முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் ஆலோசகர்கள் மற்றும் ஊழியர்களின் நியமனங்கள் அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்டதாக ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டிவந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிமெந்தும் விலை உயர்வு

கொழும்பு, மார்ச் 25

தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக ஒரு மூடை சிமெந்தின் விலையும் அதிகரித்துள்ளது.

ஒரு மூடை சிமெந்தின் விலை சுமார் ரூ. 175 அதிகரித்துள்ளதாக கட்டுமானப் பொருட்கள் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, சந்தையில் ஒரு மூடை சிமெந்து தற்போது 2,250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

தற்போதைய நெருக்கடியின் காரணமாக மணல் மற்றும் கல் உள்ளிட்ட பல கட்டுமானப் பொருள்களின் விலைகள் ஏற்கனவே அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சமையல் எரிவாயு விலை உயரும்!

கொழும்பு, மார்ச் 25

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கக்கூடும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச வர்த்தக பதற்றம் காரணமாக எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதிக்குள் எரிவாயு விலைத்திருத்தம் தொடர்பில் தீர்மானிக்கப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் வரை போதுமான கையிருப்பு உள்ளது.

அதன்படி, ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்ட எரிவாயு கப்பல் விரைவில் நாட்டை வந்தடையும்.

எவ்வாறாயினும், சர்வதேச சந்தையில் எரிசக்தி உற்பத்திக்கு நிலவும் கேள்வியின் அடிப்படையில் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி புதிய விலை அதிகரிக்கப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்த்தன மேலும் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.